**பேருவளை நகர சபை - 2024**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேருவளை நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அதிகாரம்) 181(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பேருவளை நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 03 ஆம் அத்தியாயத்தின் 3.36(அ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட அளவிடல் அடிப்படை வெளிப்படுத்தும் போது பொருத்திகள், உபகரணங்களின் வருடாந்தப் பெறுமானத் தேய்வு வீதம் 10 சதவீதமாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அந்த சொத்துக்கள் 20 சதவீதம் படி பெறுமானத் தேய்வு செய்யப்பட்டமையால் பொருத்திகளின் பெறுமானத்தேய்வு ரூபா 237,365 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நியமத்தின் 03 அத்தியாயத்தின் 3.28 முதல் 3.32 ஆம் பந்திகளுக்கு இணங்க ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | நியமத்தின் 05 ஆம் அத்தியாயத்தின் 5.14(ஆ) பந்தியின் பிரகாரம் நிறுவனம் ஒன்றுக்கு பொருத்தமான வகைப்படுத்தலின் கீழ் இழிவுப் பெறுமதி வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 15 இன் கீழ் தொகுதியின் பிரகாரம் இறுதி இருப்பு வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த பெறுமதி தனித்தனியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | நியமத்தின் 09 ஆம் அத்தியாயத்தில் 9.9 மற்றும் 9.14 பந்தியின் பிரகாரம் மூலதன மாணிய செலவினங்களுக்காக அரசாங்கத்தில் இருந்து கையளித்தல் மற்றும் மூலதன செலவினத்திற்காக அரசாங்கம் தவிர ஏனைய தரப்பில் இருந்தான கையளித்தல் அடிப்படையாக ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காண வேண்டியிருந்த போதிலும் ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காணப்பட்ட கையளித்தல்களின் வருமானமாக இனங்காணப்பட்ட பெறுமதி ஏனைய விரிவான வருமானத்தில் இருந்து கழிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் இனங்காணப்பட்டிருந்தமையும் விரிவான வருமானக் கூற்றில் அல்லது அதற்குரிய குறிப்பு 05 மற்றும் 10 இன் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக மதகுகள், வீதிகள் மற்றும் கட்டணங்களுக்காக கிடைக்க வேண்டியிருந்த கூட்டுமொத்தமான ரூபா 5,883,532 ஆன மூலதன மாணியம் கணக்கீடு செய்யப்படாமையினால் மூலதன மாணியம் மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டில் நாட்குறிப்புக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் கடன் கொடுத்தோர் ஆக ரூபா 25,997,887 செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் பேரேட்டுக் கணக்கில் அது ரூபா 23,940,802 ஆக சீராக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | நாட்குறிப்புக்கள் பேரேட்டுக் கணக்கில் சரியாக சீராக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காக ரூபா 3,836,471 ஆன நிலையான வைப்பு வட்டி வருமானமாக காண்பிக்கப்படாது இருந்தமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 3,836,471 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி ரூபா 890,377 ஆன ஆயர்வேத பொருள் இருப்பு கணக்கீடு செய்யப்படாமையால் ஆண்டின் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (உ) | கடந்த ஆண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய சம்பளம் ரூபா 6,922,374 பெற வேண்டிய சம்பளம் ரூபா 7,633,433 ஆக கணக்கீடு செய்யப்பட்ட தவறை சரி செய்யும் போது ரூபா 6,922,374 மாத்திரம் சீராக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் திரண்ட நிதிய மீதி மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 711,059 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | நாட்குறிப்புக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்குரிய வருமானத்தில் இனங்காணப்பட வேண்டிய மூலதன மாணியப் பெறுமதியை கணக்கீடு செய்யும் போது மூலதன மாணியக் கணக்கு வரவு வைத்து மீண்டெழும் அல்லாத செலவினத்திற்கான அரசாங்கத்தின் கையளித்தல் கணக்கை செலவு வைப்பதற்கு பதிலாக கூட்டுமொத்தமாக ரூபா 743,111 நடைமுறை வேலைக் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | நாட்குறிப்புக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (எ) | சபைக்குச் சொந்தமான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ரூபா 933,966 மூலதன மாணிய வருமானம் ஒன்று வருமானத்தில் இனங்காண வேண்டியிருந்த போதிலும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 1,000,000 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 66,004 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | முன்னைய ஆண்டின் கடன் கொடுத்தோரில் ரூபா 130,322 அதிகரித்து ஒதுக்கப்பட்ட தவறை சரி செய்யும் போது கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதிக் கணக்கில் செலவு வைக்க வேண்டிய போதிலும் திரண்ட நிதியக் கணக்கு வரவு வைத்து கடன் கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையால் கடன் கொடுத்தோர் மீதி மற்றும் திரண்ட நிதிய மீதி முறையே ரூபா 260,644 பெறுமதியால் அதிகரித்தும், குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டு முதல் சரியாக சீராக்கப்படும். | நாட்குறிப்புக்களின் மூலம் பேரேட்டுக் கணக்குகள் சரியாக சீராக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | குறிப்பு இலக்கம் 16 மற்றும் கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 3.5 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நூலகப் புத்தகங்களின் பெறுமானத் தேய்வு ரூபா 434,482 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 197,176 ஆக கணக்கீடு செய்யப்பட்டமயால் ஆண்டின் மிகை ரூபா 237,306 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | நாட்குறிப்புக்களின் மூலம் பேரேட்டுக் கணக்குகள் சரியாக சீராக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | 2022 ஆம் ஆண்டில் விற்றுத் தீர்க்கப்பட்ட 08 டெய்லர்களுக்கு உரிய ரூபா 143,002 ஆன திரண்ட பெறுமானத் தேய்வு, பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கில் இருந்து அகற்றப்படாத தவறை சரி செய்யும் போது பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைத்து ஒதுக்கம் மற்றும் ஏற்பாடுகள் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நாட்குறிப்புக்களின் மூலம் பேரேட்டுக் கணக்குகள் சரியாக சீராக்கப்படல் வேண்டும். |
| (ஓ) | சூரிய கனல் உற்பத்தியில் மிகையான மின்சார அலகுகளுக்கான ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் கிடைக்க வேண்டிய வருமானம் முறையே ரூபா 27,170 மற்றும் ரூபா 29,656 மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்படாமையால் மிகை ரூபா 56,826 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஔ) | மூலதன மானியம் மற்றும் சபை நிதியத்தில் இருந்து முறையே ரூபா 1,000,000 மற்றும் ரூபா 7,821 செலவில் 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 1,007,821 கூட்டுத் தொகையான யோசப்குரெ மாவத்தை மூலதனமாக்கப்படாத தவறை சரி | மேற்படி | நாட்குறிப்புக்களின் மூலம் பேரேட்டுக் கணக்குகள் சரியாக சீராக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யும் போது மூலதன மானியக் கணக்கு மற்றும் திரண்ட நிதியக் கணக்கு முறையே ரூபா 1,000,000 மற்றும் ரூபா 7,821 செலவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கு ரூபா 1,007,821 செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (க) | உரிமை மூலதனங்கள் மாற்றங்கள் கூற்றில் திரண்ட மிகையின் கீழ் திரண்ட நிதியத்தின் ஆரம்ப மீதியில் சீராக்கப்பட்ட முன்னைய காலப் பகுதியின் தவறுகளின் பெறுமதியாக திரண்ட நிதியத்தில் ஆரம்ப மீதியான ரூபா 601,852,761 காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் மிகையான ரூபா 7,694,809 இற்குப் பதிலாக விரிவான வருமானக் கூற்றில் ரூபா 6,970,556 ஆக சீராக்கப்பட்டிருந்தது. | மேற்படி | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (கா) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 670,709,699 ஆக இருந்த போதும் அது ரூபா 663,739,149 ஆகவும், உரிமை மூலதனம் மாற்றங்கள் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் தேறிய சொத்துக்களின் மீதி ரூபா 608,823,318 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (கி) | மீளாய்வாண்டிற்காக கிடைத்த அரசாங்கத்தின் மற்றும் தனியார் மூலதன மாணியங்கள் முறையே ரூபா 5,883,532 மற்றும் ரூபா 5,823,500 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 11,707,032 விரிவான வருமானக் கூற்றில் ஏனைய வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 07 கணக்கு விடயங்களின் மீதிகளுக்கும், அவற்றுக்குரிய பட்டோலைகள் / பேரேடுகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கு இடையிலான இணக்கம் செய்யப்படாத ரூபா 31,563,396 ஆன வேறுபாடை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும். | வேறுபாடுகளுக்குரிய காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களின் கூட்டுமொத்தம் ரூபா 8,983,161 இற்கான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் தவறி இருந்தது. | எதிர்காலத்தில் பட்டோலைகள் தயாரிக்கப்படும். | பட்டோலைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கயுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 1646 | சபைக்குரிய 17 வாகனங்களுக்கு உரிய ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் பொழிப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை மாதாந்த பொழிப்பு சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஏனைய பொழிப்பு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,694,809 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 502,179 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் இன்றி 2017 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 310,601 ஆன செலவு மீதியுடன் மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு மீளாய்வாண்டின் போதும் பரீட்சித்து அந்தக் கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானமான மூலம் | 2024 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | ஆதன வரியும் வரியும் | 21,143,319 | 21,288,975 | 12,663,573 | 18,985,255 | 20,906,576 | 20,906,576 | 13,698,866 | 16,458,437 |
| ii. | வாடகை | 13,117,100 | 17,754,300 | 16,803,350 | 9,974,805 | 22,546,242 | 22,546,242 | 15,333,131 | 10,448,792 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,785,000 | 2,001,600 | 2,002,400 | (800) | 1,806,800 | 1,806,800 | 1,781,600 | 78,200 |
| | | 36,045,419 | 41,044,875 | 31,469,323 | 28,959,260 | 45,259,618 | 45,259,618 | 30,813,597 | 26,985,429 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **ஆதனவரி** | | |
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வீதவரியும் வரியினதும் நிலுவை ரூபா 16,458,437 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 10,359,853 அதாவது 63 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது ஆதனவரித் தொகையில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | வருடாந்த சிட்டையிடல் ரூபா 21,288,975 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 8,625,402 அதாவது 41 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது ஆதனவரித் தொகையில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. | நடப்பாண்டின் வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இறைச்சிக் கடை வாடகை நிலுவை ரூபா 8,228,301 கூட்டுத் தொகையான இருந்ததுடன் ஆண்டின் போது எந்த தொகையும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டிற்காக இறைச்சிக் கடை வாடகை வருடாந்த மதிப்பீடு ரூபா 500,000 ஆக இருந்த போதிலும் வருடாந்த சிட்டையிடல் ரூபா 4,801,200 ஆனமையால் மதிப்பீடு | போட்டி கேள்வி விலை சமர்ப்பிக்காமையால் முரண்கள் காணப்படுகின்றது. | மதிப்பீட்டு பெறுமதிக்கும் உள்ள படியான பெறுமதிக்கும் இடையிலான |

| | | |
|---|---|---|
| மற்றும் சிட்டையிடல்களுக்கு இடையே ரூபா 4,301,200 அதாவது 860 சதவீதம் முரண்கள் அவதானிக்கப்பட்டது. | | முரண்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 411,100 ஆன தீர்த்து வைக்கப்படாத முற்பணக் கணக்கு மீதியில் 1999 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்து கொண்டு வரப்படுகின்ற ரூபா 104,244 தீர்த்து வைக்கப்படாத மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்பதற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 1980 செப்தெம்பர் 09 ஆந் திகதிய இலக்கம் 105/03 என்ற அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பேருவளை விருத்தினர் விடுதி நிர்வாகம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக ஏற்படுத்தப்பட்ட எழுத்து மூல உடன்படிக்கை சபையிடம் காணப்படாமையினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை விருந்தினர் விடுதி வாடகை ரூபா 1,395,554 செலுத்தாமைக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு சபைக்கு முடியாது இருந்தது. | 1984 ஆம் ஆண்டில் ஆவணக் கூடத்தில் ஏற்பட்ட தீயினால் ஆவணங்கள் அழிவடைந்து இருந்தது. | விருத்தினர் விடுதிக் கட்டணத்தை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) பேருவளை நகர சபையால் 2019 ஆகஸ்ட் 26 அந் திகதி, 2020 சனவரி 13 ஆந் திகதி மற்றும் 2020 யூன் 03 ஆந் திகதிகளில் முறையே ரூபா 4,595,000 தொகை ரூபா 2,995,000 மற்றும் ரூபா 4,350,000 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 11,940,000 ஆன 28 கணனி மென்பொருள் முறைமைகள் தனியார் நிறுவனத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டதுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | கூட்டுமொத்தமாக ரூபா 900,000 செலவில் இணையதளம் ஊடாக விளையாட்டு மைதானம் மற்றும் நகர மண்டபத்தை ஒதுக்கும் மென்பொருள் பெறப்பட்ட போதிலும் விளையாட்டு மைதான வசதிகள் மற்றும் நகர மண்டபத்தை ஒதுக்கும் மென்பொருள் பெறப்பட்ட போதும் விளையாட்டு மைதான வசதிகள் மற்றும் நகர மண்டபம் காணப்படாமையினால் அந்த முறைமை அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஏனைய மென்பொருள் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு உள்ள இயலுமை தொடர்பாகவும் அந்த நிறுவனத்தில் விசாரணை செய்யப்பட்டுள்ளது. | பொருளாதார ரீதியிலான பணிகளுக்காக சபை நிதியம் சிக்கனமற்ற பணிகளுக்காக சபை நிதியம் செலவிடப்படாது இருந்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் சபை கொள்வனவு செய்த 28 கணனி மென்பொருள் முறைமைகளில் 17 முறைமைகள் அமுல்படுத்தப்படாது இருந்ததுடன் அமுல்படுத்தப்பட்ட கணனி மென்பொருள் முறைமையும் எதிர்பார்க்கப்பட்ட செயற்திறனுடன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் போதியளவான பௌதீக மற்றும் மனத வளம் காணப்படாது இருந்த நிலையில் சபைக்கு தேவையற்ற மென்பொருளை கொள்வனவு செய்யதல் மற்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணான கொடுப்பனவு செய்து சபைக்கு ரூபா 6,895,000 தொகைக்கு அண்ணளவான நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக மிளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிதிப்பிரமாணம் 104 மற்றும் 156 இன் பிரகாரம் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளை சரி செய்த பின்னர் இந்த மென்பொருளை சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்கு முடியாது இருக்குமாயின் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | பேருவளை நகர சபையின் முன்னாள் தலைவரால் பேருவளை நகர சபை அதிகார பிரதேசத்திற்கு உரித்தல்லாத பேருவளை பிரதேச சபை அதிகாரப் பிரசேத்திற்கு உரிய வீதி ஒன்று அபிவிருத்தி செய்யப்பட்டமையால் 255 ஆவது அதிகாரம் அன நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு 2022 ஏப்ரல் 06 அந் திகதி உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து போதியளவான ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் விசாரணை செய்து தொடர்புடைய பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பெறுமதி ரூபா 1,075,410 ஆன உடற்பயிற்சி உபகரணங்களுடன் பேருவளை, மருதாணையில் அமைந்துள்ள உடற்பயிற்சி நிலையம் பயிற்றுவிப்பாளர் காணப்படாமையின் காரணமாக 2023 சனவரி முதல் விளைவற்றுக் காணப்படுவதுடன் உடற்பயிற்சி உபகரணங்கள் நேரடியாக கடல் காற்றுக்கு உட்படுவதன் காரணமாக வேகமாக துருப்பிடித்தலுக்கு உள்ளாகும் ஆபத்தும் காணப்பட்டது. | ஆயர்வேத கட்டிடத்தின் மேல் மாடியில் நிர்மாணித்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடற்பயிற்சி நிலையத்தை ஸ்தாபித்து உபகரணங்களைப் பாதுகாப்பதற்கும் வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 07 நிலையான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ரூபா 2,716,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 300,000 ஒதுக்கப்பட்டிருந்த 04 நிலையேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | இலக்கினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |